CAREERINDIA

Total No. of Questions : 50 ]
Total No. of Printed Pages : 4 ]

**Code No. 04**

# March, 2010
# TAMIL

Time : 3 Hours 15 Minutes ] [ Max. Marks : 100

***மாணவர்கள் கவனிக்க :***

i) வினாக்களின் எண்களைச் சரியாக குறிப்பிடவும்.

ii) விடைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

iii) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

ஒரு வரியளவில் விடை தருக : 10 × 1 = 10

1. நம் நாடு எதுவரை பரந்துள்ளது ?
2. அமிழ்தம் எங்கு கிடைக்கும் ?
3. இன்சொல் எதைப் போன்றது ?
4. மண்மீதில் உழைப்பவர் எப்படிக் கருதப்பட்டனர் ?
5. நடுகல் மீது என்னென்ன எழுதப்படும் ?
6. மனையியலின் குறிக்கோள் யாது ?
7. யார் உயர்வான் என்கிறார் பட்டுக்கோட்டையார் ?
8. தும்பாவில் ராக்கெட் ஏவுதளத்தை நிறுவியதற்குக் காரணம் என்ன ?
9. செயற்கைக் கோள் ஏவுதளமாக ஸ்ரீஹரிகோட்டாவைத் தெரிவு செய்தவர் யார் ?
10. 'இஸ்ரோ' கப்பலின் உண்மையான மாலுமி யார் ?

## பகுதி - II

அ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 4 × 2 = 8

11. திருத்தக்க தேவர் அருகதேவனின் சிறப்புக்களை எவ்வாறு பாடுகின்றார் ?
12. நுணல் எதனால் கெடும் ?
13. குந்தியிடம் அசரீரீ கூறிய செய்தி யாது ?
14. சோழனின் யானை நாணி நின்றதற்குக் காரணம் யாது ?
15. 'அரும்பாவி தன் உசுரு' என்ற நாட்டுப் புறப்பாடல் உணர்த்தும் நையாண்டிக் கருத்தினை விளக்குக.

[ Turn over

www.careerindia.com

CAREERINDIA



ஆ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

16. உழைப்பு பற்றி அண்ணா அவர்கள் கூறுவது யாது ?

17. கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்ட செய்திகள் யாவை ?

18. எதுகை வடிவில் அமைந்த விடுகதையை விளக்குக.

19. விதி பற்றியும், விதியை நம்புகிறவன் பற்றியும் பட்டுகோட்டையார் கூறும் கருத்துக்களை எழுதுக.

இ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

20. பிரார்த்தனை பற்றி அப்துல்கலாமுக்கு அவர் தந்தை கூறியது யாது ?

21. A.D.E.-யில் அப்துல்கலாமுக்கு கொடுத்த பணி யாது ?

22. எஸ்.எல்.வி - 3 திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

23. 'அக்னி' ஏவுகணை முதல் தடவை செலுத்தப்பட முடியாமைக்குப் பத்திரிக்கைகள் எவ்வாறு கிண்டலடித்தன ?

## பகுதி - III

அ. எவையேனும் **இரண்டிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 2 × 3 = 6

24. 'தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல'

25. 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக'

26. '............... உன்னோடு வந்துரைக்கும் விண்ணப்ப முண்டு'

ஆ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

27. ''கூத்து பார்த்ததில் கண்ணுக்கும், காதுக்கும் விருந்து பெற்றான்''

28. ''மனிதனை ஆக்குவதும் அழிப்பதும் அவன் சூழ்நிலை அதனை
ஆக்கமுறையில் அமைத்துத் தருவது பெண்ணின் பெருங்கடமை''

www.careerindia.com

CAREERINDIA



இ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

29. ''நமது சொந்த விமானத்தை நாமே உருவாக்குவோம்''.

30. ''உடை பற்றி ஒன்றும் கவலைப் படாதீர்கள், வெற்றி என்ற அழகான ஆடைத்தரித்திருக்கிறீர்கள் நீங்கள்''.

## பகுதி - IV

அ. எவையேனும் **மூன்றிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 3 × 5 = 15

31. தமிழ் மகள் வளருகின்ற நிலையை வரந்தருவார் எவ்வாறு வகைப்படுத்திக் கூறியுள்ளார் ?

32. இனியவை கூறல் குறித்து வள்ளுவர் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்தெழுதுக.

33. கோவலன் கருணை மறவனாகச் செயல்பட்ட பாங்கினை விளக்குக.

34. கவிஞர் வாலி தம் புதுக்கவிதையில் மகாத்மாவின் புன்னகையை எவ்வாறு விளக்குகிறார் ?

ஆ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

35. பெண் மக்களுக்கும் கல்வி இன்றியமையாதது என்ற கருத்தை மறைமலையடிகள் எங்ஙனம் விளக்குகின்றார் ?

36. மங்கலப் பொருளான வெற்றிலை, மருந்துப் பொருளாக விளங்குவதையும் விளக்குக.

37. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் ஆகிய இருவரின் நட்பின் உயர்வைப் புலப்படுத்துக.

இ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

38. அப்துல் கலாமுக்குப் பேராசிரியர் சீனிவாசனின் பாராட்டு எப்படிக் கிடைத்தது ?

39. அப்துல்கலாமுக்கு சுதாகர் செய்த உதவியைச் சுருக்கி வரைக.

40. 'அக்னி' ஏவுகணையின் சிறப்பு அம்சங்கள் யாவை ?



www.careerindia.com

CAREERINDIA



## பகுதி - V

அ. கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்குக : 1 × 5 = 5

41. ‘பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும் – நல்லாய்,
மணலுள் முழுகி மறைந்து கிடைக்கும்
நுணலும் தன் வாயாற் கெடும்’

ஆ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 4 × 2 = 8

42. சேர்த்து எழுதுக :

i) களை + பறிக்க ii) இளமை + கனி

43. வாக்கியத்தில் அமைக்க :

i) உயிரும் கொடுக்குவர்

ii) பணிவுடையன்

44. பொருளுணர்ந்து பொருத்துக :

i) நண்பர் — அருக்குக

ii) பகைவர் — சுருக்குக

iii) உண்டி — பெருக்குக

iv) சினம் — தருக்குக.

45. கீழ்க்காணும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக :

i) எங்க ஃபேமிலி சுமார் ஃபேமிலி

ii) ஸ்விம்மிங் ஒரு ஹெல்த்தி எக்ஸர்சைஸ்

46. தமிழ் விடுகதைகள் எவையேனும் இரண்டினை எழுதுக.

## பகுதி - VI

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

47. நீவிர் விரும்பும் ஒரு இலக்கியம்

48. சமூக முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை தருக : 1 × 5 = 5

49. நீர் சென்று வந்த சுற்றுலா பற்றி உனது நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

50. ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா’ - என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைக்கவும்.

www.careerindia.com